# புறநானூற்றுப் புதையல் – 8




கீரத்தனார்: நெஞ்சில் வீரமும் மனதில் ஈரமும் நிறைந்த உங்களைப்போன்றோரால் இம்மண் பெருமையுறுகிறது.
பெருஞ்சாத்தன்: எனக்காக இத்தனை சிரமம் மேற்கொண்டு வந்துள்ளீர்கள். நான் உங்களுக்கு ஏதேனும் வழங்கவேண்டுமே.
3


கீரத்தனார்;எதனையும் எதிர்நோக்கி நான் வரவில்லை. உங்களைக்காண்பதே எனக்குப் பெரும் பரிசு.
பெருஞ்சாத்தன்: இந்த யானையில் ஏறுங்கள். இது என் எளிய பரிசு. நீங்கள் குடவாயில்திரும்பும் வரை உங்களோடு இவர் துணை வருவார்.
கீரத்தனார்:உங்கள் யானையையே வழங்குமளவுக்கு எனக்கு என்ன தகுதி?
4


பெருஞ்சாத்தன்:என் வேலாயுதத்தைவிட
உங்கள் அறிவாயுதம் வலிமையுடையது.
என் பரிசு தினை அளவு.
உங்கள் தகுதி யானை அளவு.
அடுத்த வாரம் என் ஒல்லையூர்முல்லைத்தோட்ட
மாளிகைக்கு வந்து சில காலம் தங்கி
எனக்கு அறிவு விருந்து வழங்க வேண்டும்.
கீரத்தனார்: உங்கள் அன்பை
மறுப்பேனா?
அவசியம் வருகிறேன்.
5


மறுவாரம் கீரத்தனார் ஒல்லையூர்
செல்கிறார். ஊரே வழக்கத்திலிருந்து
மாறுபட்டதாக உணர்கிறார்.
வீரன்:நேற்று பெருந்தகை
பெருஞ்சாத்தன்
தொற்றுநோய்க்கு இரையாகி
எங்களை அநாதையாக்கிச்
சென்றுவிட்டாரய்யா!
6


பெருஞ்சாத்தனின் முல்லைத்தோட்ட மாளிகையை அடைகிறார் புலவர்.
கீரத்தனார்: என்ன கொடுமை இது! ஊரே சோகத்தில் மூழ்கியுள்ளது. இந்த முல்லைத்தோட்டத்தில் யாருக்காகப் பூக்கள் பூத்துக்குலுங்குகின்றன?
கீரத்தனார்:முல்லையே இரக்கமின்றி நீ எதற்காக இப்படிப் பூத்துத்தொலைகிறாய்?
7


இந்தச்சீற்றத்துடன் அவர் பாடியபாடல்தான் இது:
இளையோர்சூடார்; வளையோர்கொய்யார்;
நல்யாழ்மருப்பின் மெல்ல வாங்கிப்,
பாணன் சூடான்; பாடினிஅணியாள்;
ஆண்மை தோன்ற ஆடவர்க் கடந்த
வல்வேற் சாத்தன் மாய்ந்தபின்றை
முல்லையும்பூத்தியோ, ஒல்லையூர்நாட்டே?
(புறம் 242)
(பெருஞ்சாத்தன்வாழ்ந்தஒல்லையூர் இன்றைய புதுக்கோட்டை அருகே ஒலியமங்கலம் என்றும், புலவர் கீரத்தனாரின்குடவாயில் இன்று திருவாரூர் மாவட்டதில் குடவாசல் என்றும் அழைக்கப்படுகின்றன. இரண்டு ஊர்களுக்கும் இடைப்பட்ட தொலைவு 110 கிமீ)
8